1981 மார்ச் 31]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த வட்டக்கோட்டையில் முத்துக்கள் இருந்ததாகவும், அங்கே இப்போதும் முத்துக்கள் இருப்பதாகவும், தகுந்த முறையில் பாதுகாக்கப்படவில்லை என்றும், அதேபோன்று அதற்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய உதயகிரியில் பீரங்கிகளும் குண்டுகளும் இருந்தவை கடத்திக்கொண்டு போகப்படுகின்றன என்றும் அரசுக்குத் தகவல் ஏதேனும் வந்துள்ளதா? இப்படி பீரங்கிகளும், குண்டுகளும், முத்துக்களும் கடத்திப்போவதைத் தடுத்து, அவற்றைப் பாதுகாக்க தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட்டக்கோட்டையிலே முத்துக்கள் இருந்தனவா அல்லது வட்டக்கோட்டைக்கு அருகாமையில் இருக்கும் கடலில் முத்துக்கள் இருக்கின்றனவா எதைப் பற்றிக் கூறுகிறார்கள் என்று தெரியவில்லை. வட்டக்கோட்டையில் முத்துக்களைப் புதைத்து வைத்து இருந்தால், புதை பொருள் ஆய்வுத் துறையிடத்தில் சொல்லித்தான் தோண்டிப் பார்க்கவேண்டும்.

மேச்சேரியில் செம்மறி ஆடுகள் இன விருத்தி.

*வினா எண் 341 : திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேச்சேரி செம்மறி ஆடுகளின் உற்பத்தி மற்றும் இன விருத்தியை அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : இல்லை.

திரு. செ. செம்மலை : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மேய்ச்சேரி ஆட்டு ஆராய்ச்சிப் பண்ணையில் மேய்ச்சேரி இன செம்மறி ஆடுகளைத்தவிர வேறு இன ஆடுகளைப் பற்றிய ஆராய்ச்சியும் நடைபெற்று வருகிறதா? அந்த ஆராய்ச்சியின் பலன் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆராய்ச்சி நிலையத்தில் மேய்ச்சேரி மற்றும் தார்செட் இன செம்மறி ஆடுகள் இனக்கலப்பு செய்து புதியதொரு இறைச்சி இனச் செம்மறி ஆடுகளை உருவாக்குவது ஒரு நோக்கமாகும். அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, மேய்ச்சேரி ஆடு பிரசித்தி பெற்ற வகையைச் சேர்ந்தது. அரசு ஆடு மானியம் கொடுக்கிற பணத்தில், இந்த மேய்ச்சேரி ஆடுகளை வாங்கி, விவசாயிகளுக்குக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, ஆடு மானியம் கொடுப்பதற்கும் இந்த மூலக் கேள்விக்கும் தொடர்பு இல்லை. எனினும் ஆடு வளர்ப்பதற்காக நல்ல பொலியாடுகளை உற்பத்தி செய்வது இந்த ஆராய்ச்சி நிலையத்தின் நோக்கமாகும்.

உரத்திற்கு மத்திய அரசின் உதவித் தொகை.

வினா எண் 342— திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இதுவரை மத்திய அரசு உரத்திற்காக டன் ஒன்றுக்கு எவ்வளவு உதவித் தொகை அளித்து வந்தது ?

(ஆ) அதை நிறுத்தியதற்கு என்ன காரணம் ?

(இ) இந்த உதவித் தொகையை மீண்டும்பெற மாநில அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) உதவித் தொகை ஏதும் மத்திய அரசு அளிக்கவில்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, உரத்திற்கான பூல் பிரைஸ், ரிடெயில் பிரைஸ், மற்றும் மார்ஜினல் பிரைஸ் ஆகியவற்றை மத்திய அரசே நிர்ணயிக்கிறது. இப்படி விலை நிர்ணயிக்கிற முழு அதிகாரத்தையும் மத்திய அரசு வைத்திருக்கிறது. நாளொரு மேனியும் பொழுதுதொரு வண்ணமுமாக உர விலை ஏறிக்கொண்டு போவதால், விவசாய மக்கள்—இந்த அரசுதான், இன்றைக்கு இங்கேயிருக்கும் அரசுதான்—அதற்குப் பொறுப்பு என்று ஆங்காங்கு பேசிக்கொண்டு இருக்கிறார்கள். விலை நிர்ணயம் செய்கிற அதிகாரம் மத்திய அரசுக்கு இருந்தபோதிலும், மாநில அரசு அதைக் குறைத்து விவசாய மக்களுக்குக் கொடுக்க ஏதாவது வழி செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, உர விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு மத்திய அரசின் பொறுப்பாக இருக்கிறது. அது 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 8 ஆம் நாள் அன்று அதிகமான அளவிற்கு உரவிலையை உயர்த்தி இருக்கிறது. இந்த விலை உயர்வு உணவு உற்பத்தியைப் பாதிக்கும் என்பதைச் சொல்லி இருக்கிறோம். விவசாயிகளின் இடு பொருள்களுக்கு விலையிலே ஒரு பகுதியை மானியமாகக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டு இருக்கிறோம் பதில் வரவில்லை. சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தில் இது போன்ற உரங்கள் பெறுவதற்கு மானியம் கொடுக்கப் படுகிறது. அதை மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் ஏற்றுக்கொள்கின்றன.